# பொதுப்பணித்துறை
# கட்டடங்கள்

# மக்கள் சாசனம்
# 2015

©
தமிழ்நாடு அரசு
2015

## பொதுப்பணித்துறை
## கட்டடங்கள்

# மக்கள் சாசனம் – 2015

### 1.0 முன்னுரை :

1.1 இந்த மக்கள் சாசனம், பொதுப்பணித்துறையின் கட்டடப் பிரிவு, பொதுக் கட்டடங்களின் தரத்தினை நிலை நிறுத்துதல், குறிப்பிட்ட கால வரையறை, வெளிப்படைத்தன்மை மற்றும் கடமை பொறுப்புகள் குறித்து தமிழக மக்களுக்கு உறுதி செய்வது பற்றிய அறிக்கை ஆகும்.

### 2.0 பொறுப்பு :

2.1 பொதுக் கட்டடங்களை திட்டமிட்டு, வடிவமைத்து, கட்டுமானப் பணியுடன் பராமரிப்பு பணியும் செய்வது மற்றும் அக்கட்டடங்களின் உறுதித் தன்மையை கண்காணித்தல்.

### 3.0 நோக்கம் :

3.1 மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் மேம்பட்ட நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் தேவைக்கேற்ப பொதுக் கட்டடங்களை நியாயமான செலவில் கட்டித்தரும் தரமான நற்பணியை ஆற்றுதல்.

### 4.0 செயல்பாடுகள் :

4.1 பள்ளிகள், மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள், வணிக வரி அலுவலகங்கள், மாவட்ட தொழிற்சாலை மையங்கள், அரசு குடியிருப்புகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள், நினைவகங்கள், நீதிமன்றங்கள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு தங்கும் விடுதி கட்டடங்கள் உட்பட, பல பொதுக் கட்டடங்களுக்கு திட்டமிட்டு, வடிவமைத்து, மதிப்பீடு தயாரித்து கட்டுமானப் பணிகளைச் செய்வதுடன், இயற்கை சீற்றத்தால் ஏற்படும் ஆழிப்பேரலை மற்றும் புயல் பாதுகாப்பு மைய கட்டடங்களை கட்டுதல் மற்றும் பாரம்பரிய

கட்டடங்களைப் பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

4.2 ஒப்பந்தப்புள்ளிகளை வழங்குவதில் ஒளிவுமறைவற்ற தன்மையைப் பின்பற்றுவதற்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அதற்கென உள்ள இணையதளத்தில் வெளியிடுதல்.

4.3 அரசு கட்டடங்களுக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

4.4 குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல், மின்வசதி, குளிரூட்டுதல், மின்தூக்கிகள் அமைத்தல், தீயணைப்பு வசதி, சாய்வுதளம் அமைத்தல், மழை நீர் சேகரிப்பு மற்றும் தோட்டங்கள் அமைத்தல் போன்ற பணிகளுக்கான சேவைகள் வழங்குதல்.

4.5 பொதுமக்களிடமிருந்து நேரடியாகவோ அல்லது மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்களில் இடம் பெற்றுள்ள குறைகளைத் தீர்வு செய்தல்.

4.6 இவ்வமைப்பின் கட்டடப் பணிகள் அனைத்தும் தேசிய கட்டிட தரக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு ஏற்ப உள்ளதை உறுதி செய்தல்.

## 5.0 அமைப்பு :

5.1 கட்டடங்கள் அமைப்பு, முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் மூன்று மண்டலங்களாக இயங்குகிறது :

1) தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை மண்டலம், சென்னை.
2) தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), திருச்சி மண்டலம், திருச்சி.
3) தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), மதுரை மண்டலம், மதுரை.

5.2 முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் பிற பொதுப்பணித்துறை அலுவலகங்கள் பின்வருமாறு :

1) தலைமைக் கட்டடக் கலைஞர், சென்னை.
2) திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை மற்றும்
3) இயக்குநர், பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி

5.3 சென்னை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மூன்று மின் வட்டங்கள் அந்தந்த கண்காணிப்புப் பொறியாளர்கள் (மின்) கட்டுபாட்டில், மின் பணிகளை மேற்கொள்கிறது.

5.4 ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, சென்னையில் செயற்பொறியாளர் ஒருவரின் தலைமையில், 'தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம்' இயங்கி வருகிறது.

5.5 பொதுப்பணித் துறை கட்டடங்கள் அமைப்பின் தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் அலுவலக முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் பிற்சேர்க்கை–Iல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 6.0 சேவைகள்:

### 6.1 ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

அரசுப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான விதிமுறைகள் தமிழ்நாடு பொதுப்பணித்துறை விதித் தொகுப்பின் பிற்சேர்க்கை–XXIII–ல் இடம் பெற்றுள்ளன.

### 6.1.1 வட்டம் மற்றும் கோட்டங்களில் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்தல் :

ஒப்பந்தகாரர்களின் நிதி நிலைமை, அனுபவம் போன்றவற்றை பொறுத்து அந்தந்தப் பகுதியின் கண்காணிப்புப் பொறியாளர்கள் (மாநில அளவில் / வட்ட அளவில்) மற்றும் செயற்பொறியாளர்களால் பொருத்தமான வகைப்பாட்டின் கீழ் ஒப்பந்தக்காரராக பதிவு செய்யப்படுகிறது.

### 6.1.2 ஒப்பந்தக்காரர் வகைப்பாடு

- வகைப்பாடு I : ரூ.75.00 இலட்சங்களுக்கு மேலுள்ள பணிகள்
- வகைப்பாடு II : ரூ. 75.00 இலட்சம் வரையுள்ள பணிகள்
- வகைப்பாடு III : ரூ. 30.00 இலட்சம் வரையுள்ள பணிகள்
- வகைப்பாடு IV : ரூ. 15.00 இலட்சம் வரையுள்ள பணிகள்
- வகைப்பாடு V : ரூ. 6.00 இலட்சம் வரையுள்ள பணிகள்

### 6.1.3 விண்ணப்பக் கட்டணம்

- கோட்ட அளவில் : ரூ.1000 + மதிப்பு கூட்டு வரி
- வட்ட அளவில் : ரூ.1000 + மதிப்பு கூட்டு வரி
- மாநில அளவில் : ரூ.5000 + மதிப்பு கூட்டு வரி

### 6.1.4 பதிவுக் கட்டணம்

- கோட்ட அளவில் : வகைப்பாடு – V : ரூ.10,000/–
- வட்ட அளவில் : வகைப்பாடு– V, IV, III, II மற்றும் I : ரூ.20,000/–
- மாநில அளவில்: வகைப்பாடு – IV, III, II மற்றும் I : ரூ.50,000/–

### 6.1.5 ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்குரிய அத்தியாவசிய தகுதிகள்

- வருமானவரித் துறையில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி விபர அறிக்கை மற்றும் நிரந்தர கணக்கு எண்.
- தமிழ்நாடு மாநில அரசின் விற்பனை வரி நிர்ணய எண் (TIN)
- ஒப்பந்தக்காரர், தேர்ந்தெடுக்கும் வகைப்பாட்டின் 30 சதவீதத்திற்கு குறையாத வகையில் வருவாய்த்துறையினால் வழங்கப்படும் அசையா சொத்துக்களுக்கான சொத்து மதிப்பு சான்றிதழ் பெறப்பட வேண்டும். சொத்து மதிப்பு சான்றிதழ், பதிவு செய்ய விரும்பும் தனி நபர் பெயரிலோ அல்லது நிறுவனமாக இருப்பின் பங்குதாரர்களில் ஒருவருடைய பெயரிலோ பெறப்பட்டிருக்க வேண்டும்.
- பணிகளை மேற்கொள்வதற்காக நிதித் திறன் அறிய, ஒப்பந்தக்காரர் கடந்த ஒரு வருடத்தில் வங்கியில் மேற்கொண்ட பணப் பரிமாற்றம் குறித்த சான்றிதழ்.
- கட்டுமானப் பணிகளில் அனுபவம்.

- ஒப்பந்ததாரரிடம் உள்ள கருவிகள் மற்றும் தளவாடங்கள் பற்றிய விவரங்கள்.
- பணிகளை மேற்பார்வை செய்வதற்கான தொழில்நுட்ப பணியாளர்கள்.

**6.1.6** சொத்து மதிப்புச் சான்றிதழ், அனுபவம் மற்றும் கடந்த கால செயல்திறன் அடிப்படையில் அடுத்த வகைப்பாட்டிற்கு உயர்த்துவது நிர்ணயிக்கப்படும்.

**6.1.7** ஒப்பந்தக்காரர் ஒரு வகைப்பாட்டில் குறைந்த பட்சம் ஒரு வருடம் செயல்பட்டிருந்தால் மட்டுமே , அதாவது வகைப்பாடு IV, III மற்றும் II , அடுத்த உயர் வகைப்பாட்டிற்கு உயர்வு பெற இயலும்.

**6.1.8 பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டிய கணக்குத் தலைப்பு**

8782 – Cash Remittance – PW Other Remittance is items adjustable by Public Works and the credit of Executive Engineer, PWD., Division. (D.P. Code No.8782 - R - ACAD – 0003)

**6.1.9 விண்ணப்பங்களை நிராகரித்தல் :**
விண்ணப்பத்தை பதிவு செய்யும் அதிகாரம் உள்ளவருக்கு, பதிவு செய்வதற்காக பெறப்பட்ட எந்த விண்ணப்பத்தையும் நிராகரிக்க முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு விண்ணப்பம் நிராகரிக்கப்படும் நிலையில், நிராகரிப்புக்கான காரணங்களை சுருக்கமாக தெரிவித்து விண்ணப்பதாரருக்கு காரணம் கேட்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டும்.

**6.1.10 வகைப்பாட்டில் இறக்கம்**
பதிவு செய்யும் அலுவலர், ஒப்பந்தக்காரரை வகைப்பாடு இறக்கம் செய்யலாம். அவ்வாறு வகைப்பாடு இறக்கம் செய்தாலும், ஒப்பந்தகாரரின் விளக்கத்தைப் பெற்று தகுதியின் அடிப்படையில், அவரை மீண்டும் அதே வகைப்பாட்டில் பதிவு செய்வது குறித்து பதிவு செய்யம் அலுவலர் பரிசீலனை செய்யலாம்.

**6.1.11 எளிதான மற்றும் பாரபட்சமற்ற அணுகுமுறை :**
அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி பாரபட்சமற்ற முறையில் கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

**6.1.12 சேவையை நிறைவாக செய்வதற்கு இவ்வமைப்பினால் எதிர்பார்க்கப்படும் மக்களின் பங்கு :**

மேற்குறிப்பிட்ட சேவையை பெற விரும்பும் மக்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அதனுடன் தேவைப்படும் மதிப்பிற்கான சொத்து மதிப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வருமானவரி அறிக்கை தாக்கல் செய்ததற்கான ஆதாரங்கள், விற்பனை வரி பதிவுச் சான்றிதழ், நிதித் திறன் ஆதரவு விவரங்கள், விண்ணப்பதாரரிடம் உள்ள பணியாளர் திறன் மற்றும் இயந்திரங்களின் விவரங்கள் ஆகியவற்றை கண்காணிப்புப் பொறியாளரிடம் அல்லது செயற் பொறியாளரிடம் உண்மைத் தன்மையை சரிபார்த்திட சமர்ப்பிக்க வேண்டும்.

**6.1.13 குறைகளைக் களைதல்**

அந்தந்த கண்காணிப்புப் பொறியாளர் அல்லது செயற்பொறியாளரை தொடர்பு கொண்டு தீர்வு காணலாம்.

**6.2. ஒப்பந்தப்புள்ளி அட்டவணை வழங்குவதற்கான நடைமுறைகள்:**

**6.2.1 தகவல்கள் :**

ஒப்பந்த அடிப்படையில் இத்துறையில் கட்டடம் கட்டும் பணி அல்லது பராமரிப்புப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்குத் தேவையான ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அதிகாரி அவ்வப்போது வழங்குவார்.

**6.2.2 சேவையின் தரம் :**

பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவை குறித்த விபரங்கள் பின்வரும் வழிகளில் தெரிவிக்கப்படும் :–

**6.2.2.1** அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்களிலும், குறிப்பிட்ட இணையதளத்தின் மூலமும், ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விளம்பரம் செய்யப்படுகிறது.

**6.2.2.2** பணியின் மதிப்பைப் பொறுத்து, சென்னை, தலைமைச் செயலகம், மக்கள் தொடர்புத் துறை இயக்குநரால் வெளியிடப்படும், வாராந்திர ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் அல்லது அந்தந்த மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் வாரத்திற்கு இருமுறை வெளியிடும்

ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

**6.2.2.3** ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, அந்தந்த பொதுப்பணித்துறை அலுவலகங்களில் உள்ள அறிவுப்புப் பலகையிலும் காட்சிக்கு வைக்கப்படும்.

**6.2.2.4** பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு, அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில், அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட முகவரியிட்ட உறையில் ஒப்பந்தப்புள்ளி அட்டவணை அஞ்சல் மூலம்அனுப்பி வைக்கப்படும்.

### 6.2.3 கலந்தறிதல் மற்றும் தேர்வு செய்தல் :

இச்சேவையைப் பற்றிய விவரங்களை ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அலுவலரிடம் பெறலாம்.

### 6.2.4 ஒப்பந்தப்புள்ளி குறித்த குறைபாடுகள் தீர்வு :

அந்தந்த ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அலுவலரை தொடர்பு கொள்வதன் மூலம் குறைகளைத் தீர்வு செய்யலாம்.

### 6.2.5 விலை மதிப்பு :

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு குறித்து தெரிந்துகொண்டவுடன், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை பெறுவதற்காக ஒப்பந்தக்காரர் எழுத்து மூலம் வேண்டுகோள் அளிப்பதுடன், ஒப்பந்தப்புள்ளி அட்டவணைக்கான விலையை வங்கி செலுத்து சீட்டு / கேட்புக் காசோலை மூலம் செலுத்த வேண்டும். அவ்வாறு வேண்டுகோள் கடிதம் உரிய கட்டணத்துடன் பெறப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளி அட்டவணை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும்.

**6.2.6** மேற்கொள்ளப்படவுள்ள பணியின் மதிப்பின் அடிப்படையில், செலுத்தவேண்டிய தொகை மற்றும் செலுத்தும் வழிமுறை பற்றி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவிக்கப்படும்.

## 6.3. பொது மக்களுக்கான பிற சேவைகள்:

### 6.3.1 பொதுக் கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித் தன்மை குறித்து சான்றிதழ் வழங்குதல்:

தனியார் பள்ளிக் கட்டடங்கள், கல்லூரிக் கட்டடங்கள், திரை அரங்குகள், முதலிய கட்டடங்களின் உரிமையாளர்கள், அவர்களது

கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழைப் பெற, பொதுப்பணித்துறை கட்டட அமைப்பின் கண்காணிப்புப் பொறியாளரிடம் பிற்சேர்க்கை–IIல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி இந்த சேவையை பயன் படுத்திக் கொள்ளலாம். பொதுவாக, இந்த சான்றிதழ் பிற்சேர்க்கை–IIIல் குறிப்பிட்டுள்ளவாறு நூற்றுவீதக் கட்டணம் (Centage charge) செலுத்துவதன் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

### 6.3.2 தரப் பரிசோதனை :

சிமெண்ட், இரும்பு, மணல் மற்றும் கற்காரையின் (Concrete) மீதான தரப் பரிசோதனைகள், இந்திய தரநிர்ணய கழகத்தின் தரநிர்ணய விதிகளின்படி, சென்னையில் உள்ள தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையத்தினால், பிற்சேர்க்கை–IIIல் குறிப்பிட்டுள்ள குறைந்த கட்டணம் பெற்றுக்கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

### 6.3.3 புதிய கட்டுமானப் பொருட்களுக்கு ஒப்புதல் :

முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) அவர்களை தலைவராகவும், பிற அரசுத் துறைகள், அரசு சார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களிலிருந்து உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 'மதிப்பிடும் குழுவினால்' புதிய கட்டுமான பொருட்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இதன் தொடர்பாக சென்னையிலுள்ள பொதுப்பணித் துறை திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளரை அணுகலாம்.

### 6.3.4 கட்டடங்களுக்கு நியாய வாடகைச் சான்றிதழ் வழங்குதல் :

பல்வேறு அரசு அலுவலகங்களுக்கு வாடகைக்கு விடப்படும் தனியார் கட்டடங்களுக்கு நியாய வாடகை சான்றிதழ் இத்துறையால் வழங்கப்படுகிறது. தொடர்புடைய செயற் பொறியாளர்களுக்கு நியாய வாடகை சான்றிதழ் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 6.3.5 பொதுக்கூட்ட மேடையின் உறுதித்தன்மை சான்றிதழ் :

பொது மக்கள் அல்லது சங்கம் அல்லது நிறுவனத்தின் உறுப்பினர் , மிக மிக முக்கியமானவர்கள் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டம் நடத்தும்பொழுது, பொதுக்கூட்ட மேடையின் உறுதித்தன்மைச் சான்றிதழை சம்பந்தப்பட்ட செயற்பொறியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**6.3.6 மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்களை தீர்வு செய்தல் :**

முதலமைச்சரின் தனிப்பிரிவில், பொதுப்பணித் துறை கட்டடங்கள் அமைப்பு தொடர்பான பொருள் குறித்து அளிக்கப்பட்ட மனுக்கள், ஒருங்கிணைப்பு அலுவலரான (Nodal officer) துணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, மனுதாரருக்கு உரிய பதில் அனுப்பப்பட்ட பின்னர், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரம் அரசுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**6.3.7** தமிழ்நாடு சினிமா (கட்டுப்பாடு) விதிகள் 1957ல் விதி 38 (1)ன்படி திரைஅரங்குகளின் வரைபடங்களுக்கு, பொதுப்பணித் துறை அலுவலர்களால், அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் கட்டடணத்தைப் பெற்றுக் கொண்டு உரிய பரிந்துரைகள், திரை அரங்குகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**6.3.8** அரசாணை (நிலை) எண். 231, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.09.1996ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, பள்ளிக் கட்டடங்கள், கல்லூரிக் கட்டடங்கள், வணிக கட்டடங்கள் போன்றவற்றிற்கு, அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் கட்டடத்தைப் பெற்றுக் கொண்டு, கட்டட உறுதித்தன்மை சான்றிதழ் பொதுப்பணித் துறை பொறியாளர்களால் வழங்கப்படுகிறது.

**6.3.9** அரசாணை (நிலை) எண். 972, பொதுப்பணி (ஜி2) துறை, நாள் 13.07.1992ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, அவ்வப்போது அரசால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை பெற்றுக் கொண்டு, பொதுப்பணித்துறை பொறியாளர்களால் திரையரங்க கட்டடங்களுக்கு ‘‘கட்டட உறுதித்தன்மை சான்றிதழ்’’ வழங்கப்படுகிறது.

**6.4 வைப்புத் தொகைப் பணிகள் :**

அரசு சார்ந்த, தனியார் துறை, கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தொழிற்சாலை முதலியவற்றின் கோரிக்கை அடிப்படையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட சதவீதத்தின்படி நூற்றுவீதக் கட்டணம் பெற்றுக் கொள்ளப்படும்.

## 7. தகவல் பெறும் உரிமைச் சட்டம் :

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல்களைப் பெற விண்ணப்பம் அனுப்புவோர் தங்கள் பகுதியில் உள்ள பொதுப்பணித் துறை அலுவலர்களை அணுகலாம். **“பொதுத் தகவல் அலுவலர்கள்”** மற்றும் **“மேல்முறையீட்டு அலுவலர்கள்”** குறித்த பட்டியல் பிற்சேர்க்கை–IV-ல் அளிக்கப்பட்டுள்ளது.

## 8. சிறந்த முறையில் சேவைபுரிய பொதுமக்களின் ஒத்துழைப்பு :

8.1 சேவையின் முழுப் பயனைப் பெற அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். அரசு விதிமுறைகளுக்கு மாறான, அலுவலக நடைமுறைகள், விதிகள் மற்றும் துறையின் கட்டுபாடுகளுக்குப் பொருந்தாத கோரிக்கைகளை மக்கள் தவிர்க்க வேண்டும்.

8.2 மக்கள் தங்களின் குறைகளை, தொடர்புடைய பொதுப்பணித் துறை அலுவலரிடம் முதலில் தெரிவித்து தீர்வு காணலாம். கீழ்நிலையில் உள்ள அலுவலர்களிடம் தீர்வு கிடைக்கவில்லை எனில், உயர் அலுவலரிடம் முறையிடலாம்.

8.3 ஒப்பந்தப்புள்ளி அட்டவணை, விண்ணப்பிக்கும் அனைவருக்கும் வழங்கப்பட்டிருப்பினும், தகுதியுள்ள ஒப்பந்தகாரர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க வேண்டும்.

8.4 பெருமளவில் மக்கள் பயன்பெறும் நோக்கத்துடன், பொதுப்பணித் துறையின் பணிபுரியும் முறைகளில் மற்றும் செயல்பாடுகளில் மேம்பாடு செய்வதற்கான கருத்துகளை தெரிவிக்கலாம்.

**ஓ. பன்னீர்செல்வம்**
**நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்**

## பிற்சேர்க்கை–I

## பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பு அலுவலர்களின் விவரம் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள்

| வ. எண் | பொறுப்பிலுள்ள அலுவலர்கள் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை மண்டலம் சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28525367 |
| 2 | தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), திருச்சி மண்டலம் திருச்சி | கண்டோன்மண்ட், திருச்சி–620 001 | 0431-2418722 |
| 3 | தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), மதுரை மண்டலம் மதுரை | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம் மதுரை 625 002 | 0452 – 2530862 |
| 4 | இணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்),<br><br>முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை மண்டலம் சென்னை அலுவலகம் | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28413725<br>044-28410402 Ext. 152 |
| 5 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., மின் வட்டம், சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28410402 Ext. 303 |
| 6 | துணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), (ஒருங்கிணைப்பு அதிகாரி – முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் பொது தகவல் அலுவலர் –தகவல் பெறும் உரிமைச் சட்டம்) | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28410402 Ext. 161 |
| 7 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், மருத்துவப் பணிகள், சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28545501<br>044-28410402 Ext. 121 |

| வ. எண் | பொறுப்பிலுள்ள அலுவலர்கள் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 8 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,<br>சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28550446<br>044-28410402<br>Ext. 290 |
| 9 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம்<br>சென்னை | பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை–5 | 044-28410402<br>Ext. 276 |
| 10 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,<br>வேலூர் | பொதுப்பணித்துறை வளாகம்<br>வேலூர்–632 001. | 0416-2221316 |
| 11 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,<br>சேலம் | பொதுப்பணித்துறை வளாகம்<br>சேலம்–7. | 0427-2416732 |
| 12 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,<br>கோயமுத்தூர் | டவுன் ஹால்,<br>பொதுப்பணித்துறை வளாகம்<br>கோயமுத்தூர் | 0422-2302611 |
| 13 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,<br>திருச்சி | கண்டோன்மண்ட்,<br>திருச்சி–620 001 | 0431-2462604 |
| 14 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,<br>மருத்துவப் பணிகள், திருச்சி | கண்டோன்மண்ட்,<br>திருச்சி–620 001 | 0431-2410689 |
| 15 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்,<br>மதுரை | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம்<br>மதுரை 625 002. | 0452-2530817 |

| வ. எண் | பொறுப்பிலுள்ள அலுவலர்கள் | முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 16 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டட கட்டுமானம் மற்றும்<br>பராமரிப்பு வட்டம்,<br>மருத்துவப் பணிகள், மதுரை | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம் மதுரை 625 002. | 0452-2530057 |
| 17 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>கட்டட கட்டுமானம் மற்றும்<br>பராமரிப்பு வட்டம்,<br>திருநெல்வேலி | பொதுப்பணித்துறை வளாகம்,<br>திருநெல்வேலி 627 002 | 0462-2576711 |
| 18 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>மின் வட்டம்,<br>திருச்சி | கண்டோன்மண்ட்,<br>திருச்சி–620 001 | 0431-2418144 |
| 19 | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>மின் வட்டம்,<br>மதுரை | பொதுப்பணித்துறை வளாகம், தல்லாக்குளம் மதுரை 625 002. | 0452-2530757 |

## பிற்சேர்க்கை – II

## தனியார் கட்டடங்களுக்கான, கட்டட உறுதித் தன்மை சான்று வழங்கும் சேவைக்கான கட்டண விவரம்

(அரசாணை நிலை எண்.181, பொதுப்பணித் (ஜி2) துறை, நாள் 16.05.2003–ன்படி)

| வ. எண் | சோதனை மற்றும் நோக்கம் | கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 50 ஆண்டுகள் மற்றும் அதற்குக் குறைவான ஆண்டுகள் பழமையான தனியார் கட்டடங்களை ஆய்வு செய்து, மூன்று ஆண்டுகளுக்கான கட்டட உறுதித் தன்மை சான்று வழங்குதல் | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.10/– , குறைந்தபட்சம் ஒரு கட்டடத்திற்கு ரூ.5000/– |
| 2 | 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தனியார் கட்டடங்கள் ஆய்வு செய்து ஓராண்டு உறுதித் தன்மை சான்று வழங்குதல். | ஒரு சதுரமீட்டருக்கு ரூ.5/– குறைந்தபட்சம் ஒரு கட்டடத்திற்கு ரூ.5000/– |
| 3 | சீர்குலைந்த தனியார் கட்டடங்களை ஆய்வு செய்தல் மற்றும் அதனை சீர்படுத்தும் பரிந்துரைகள் வழங்குதல். | ரூ.5,000/– |

**பிற்சேர்க்கை – III**

## அரசு / அரசு சார்ந்த / பொதுத்துறை / தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களில் சேதமில்லா சோதனை கருவிகள் கொண்டு, சோதனை செய்வதற்கு சேவைக் கட்டடண விவரங்கள்

(அரசாணை நிலை எண்.97, பொதுப்பணித் (ஜி1) துறை, நாள் 03.06.2011–ன்படி)

| வ. எண் | சோதனை மற்றும் நோக்கம் | கருவி | கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | சராசரி எதிர்வீச்சி எண் தீர்மானிப்பது மற்றும் கட்டுமான அங்கங்களில் மேற்பரப்பு அருகில் கற்காரைத் திறன் கண்டுபிடிப்பது. | எண்முறை எதிர்வீச்சு சுத்தி (Digital Rebound Hammer) | ஒரு புள்ளிக்கு ரூ.50/– வீதம் |
| 2 | கற்காரை நன்னிலை தீர்மானிக்க மற்றும் கற்காரையின் உள்ளே இருக்கும் தேன்கூட்டுக் கறைபாடு, வெற்றிடம் மற்றும் விரிசல் அளப்பது | கேளாஒலித்துடிப்பு வேகக் கருவி (Ultrasonic Pulse Velocity) | ஒரு புள்ளிக்கு ரூ.75/– வீதம் |
| 3 | கற்காரையின் உள்ளே கம்பி வலுவூட்டிகளின் இருப்பிடம் தீர்மானிக்க | வலுக்கம்பி விவர வருடி (Rebar Data Scan) | ஒரு புள்ளிக்கு ரூ.75/– வீதம் |
| 4 | முன்வார்ப்பு கனச்சதுர கற்காரையின் திறன் தீர்மானிப்பது | அமுக்க சோதனைக் கருவி (Compression Testing Machine) | மூன்று கனச்சதுர வார்ப்புகளுக்கு ரூ.150/– |
| 5 | கட்டட கட்டுமான அங்கங்களின் அமுக்கத்திறன் தீர்மானிப்பது | மாதிரி வெட்டிக் கருவி மற்றும் அமுக்க சோதனைக் கருவி (Core Cutter and Compression Testing Machine) | ஒரு மாதிரிக்கு ரூ.900/– வீதம் |

## பிற்சேர்க்கை – IV

## பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பு

## தகவல் பெறும் உரிமை சட்டம் 2005
## பொது தகவல் அலுவலர் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர் விவரங்கள்

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 1 | முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை மண்டலம் சென்னை–5<br><br>1. பொ.த.அ / துணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்)<br>2. மே.மு.அ / இணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) | 044<br><br>044 | 28410402 Ext 161<br><br>28413725 | முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை மண்டலம் சென்னை, காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை.5 |
| | **கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சென்னை–5** | | | |
| 1 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டடங்கள் கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், சென்னை<br>1. பொ.த.அ / துணைக் கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 044 | 28410402 Ext 123<br><br>Ext 121 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், காமராஜர் சாலை, சேப்பாக்கம் , சென்னை –5 |
| 2 | செயற் பொறியாளர், பொ.ப.து., வட மாநகர கோட்டம், சென்னை –5<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 044 | 28410402 Ext.125<br><br>28516568 | செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, வட மாநகர கோட்டம், காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை –5 |
| 3 | செயற் பொறியாளர், பொ.ப.து., தென் மாநகர கோட்டம், சென்னை –5<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 28410402 Extn.344<br><br>28517520 | செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, தென் மாநகர கோட்டம், காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை –5 |
| 4 | செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டடங்கள் (கட்டுமானம்) கோட்டம்–1, சேப்பாக்கம், சென்னை –5<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Ext 293 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம்) கோட்டம்–1, சேப்பாக்கம், சென்னை –5 |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம்& பராமரிப்பு) கோட்டம் – காஞ்சிபுரம்<br>1. பொ.த.அ/தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 27238672 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், காஞ்சிபுரம்–631 501 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 6 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் – திருவள்ளூர்<br>1. பொ.த.அ./தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 27661174 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், திருவள்ளூர்–601 201 |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், சென்னை –5** | | | |
| 1 | கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ /உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ /கண்காணிப்புபொறியாளர் | 044<br><br>044 | 28550446<br>Extn.292<br><br>28550446 | கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், சென்னை –5 |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம்) கோட்டம் –1, மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ/ உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Extn.294<br>Extn. 293 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம்) கோட்டம் –1, மருத்துவப் பணிகள், சென்னை –5 |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம்) கோட்டம் –2, மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ/ உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Extn. 180<br>Extn. 244 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம்) கோட்டம் –2, மருத்துவப் பணிகள், சென்னை –5 |
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம்) கோட்டம் –3, மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ / உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 044 | 28410402<br><br>Extn.300<br>Extn.299 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமான) கோட்டம் –3, மருத்துவப் பணிகள், சென்னை –5 |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (பராமரிப்பு) கோட்டம் , மருத்துவப் பணிகள், சென்னை –5<br>1. பொ.த.அ / உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 27661174 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், சென்னை –5 |
| 6 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், வேலூர்<br>1. பொ.த.அ / உதவி செயற் பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0416 | 2246966 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் , மருத்துவப் பணிகள், வேலூர் |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், வேலூர்** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – வேலூர் –1<br>1. பொ.த.அ / துணைக்கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புபொறியாளர் | 0416 | 2221316 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – வேலூர் –1 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் – வேலூர் –4<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0416 | 2220113 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – வேலூர் –4 |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் –திருவண்ணாமலை<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ /செயற்பொறியாளர் | 04175 | 236068 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – திருவண்ணாமலை |
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் –கடலூர்<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04142 | 230274 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம் – கடலூர் |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், விழுப்புரம்<br>1 . பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04146 | 226793 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம், விழுப்புரம் |
| | **மின்வட்டம் , சென்னை** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின்வட்டம், சென்னை –5<br>1. பொ.த.அ / உதவி பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 044 | 28410402<br>Ext. 305<br>Ext. 303 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின்வட்டம், சென்னை –5 |
| 2 | மின் பொறியாளர் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – மருத்துவப் பணிகள், சென்னை–5<br>1. பொ.த.அ / உதவி பொறியாளர் (மின்)<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் (மின்) | 044 | 28410402<br>Ext. 308<br>Ext. 305 | மின் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – மருத்துவப் பணிகள், சென்னை–5 |
| 3 | மின் பொறியாளர் பொதுப்பணித்துறை, மின் கோட்டம்– 1, சென்னை –5<br>1. பொ.த.அ/ உதவி பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 28410402<br>Ext. 141<br>Ext. 136 | மின் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – 1, சென்னை –5 |
| 4 | மின் பொறியாளர் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – 2, சென்னை –5<br>1. பொ.த.அ/ செயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 044 | 28410402 | மின் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – 2, சென்னை –5 |
| | **கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருச்சி** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் –திருச்சி<br>1. பொ.த.அ / துணைக் கண்காணிப்புபொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புபொறியாளர் | 0431 | 2462604 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், திருச்சி–620 001 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் –திருச்சி<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0431 | 2771632 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், திருச்சி–620 001 |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் –புதுக்கோட்டை<br>1. பொ.த.அ / வரைத் தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / உதவி செயற்பொறியாளர் | 04322 | 221596 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், புதுக்கோட்டை |
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம் தஞ்சாவூர்<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04362 | 230323 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் தஞ்சாவூர் |
| 5 | செயற்பொறியாளர் , பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் –நாகப்பட்டினம்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04365 | 220366 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் நாகப்பட்டினம் |
| | **கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி<br>1. பொ.த.அ / துணைக்கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புபொறியாளர் | 0431 | 2418722 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>மருத்துவப் பணிகள், திருச்சி<br>1. பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0431 | 2466363 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம் மருத்துவப் பணிகள், திருச்சி |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>மருத்துவப் பணிகள், திருப்பூர்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0421 | 2472277 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டிட (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருப்பூர் |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>மருத்துவப் பணிகள், சேலம்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | | | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், சேலம். |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| | **கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் ,சேலம்<br>1. பொ.த.அ / துணைக்கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0427 | 2416732 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – சேலம் |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், சேலம்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0427 | 2413116 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், சேலம் |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், நாமக்கல்<br>1. பொ.த.அ /முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04286 | 230966 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், நாமக்கல் |
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், அரியலூர்<br>1. பொ.த.அ /முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04329 | 224550 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், அரியலூர் |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம், தர்மபுரி<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04342 | 230161 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் பராமரிப்பு) கோட்டம், தர்மபுரி |
| | **கட்டடங்கள் (கட்டுமான& பராமரிப்பு) வட்டம், கோயமுத்தூர்** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர்<br>பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம்<br>கோயமுத்தூர்<br>1. பொ.த.அ / துணை கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0422 | 2302611 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – கோயமுத்தூர் |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>ஈரோடு–11<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0424 | 2265650 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், ஈரோடு–11 |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கோயம்புத்தூர்<br>1.பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0422 | 2395521 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கோயம்புத்தூர் |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கரூர்<br>1.பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04324 | 261152 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கரூர் |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், உதகமண்டலம்<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0423 | 2450123 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், உதகமண்டலம்–643 001 |
| | **மின் வட்டம் , திருச்சி** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் பொதுப்பணித்துறை, மின்வட்டம், திருச்சி<br>1. பொ.த.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் (மின்) | 0431 | 2418144 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின்வட்டம், திருச்சி |
| 2 | மின் பொறியாளர் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – கோயம்புத்தூர்<br>1. பொ.த.அ / கண்காணிப்பாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0422 | 2382997 | மின் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் –கோயம்புத்தூர் |
| 3 | மின் பொறியாளர் பொதுப்பணித்துறை, மின் கோட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி<br>1. பொ.த.அ / உதவிப் பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் (மின்) | 0431 | 2412797 | மின் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின் கோட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி |
| 4 | மின் பொறியாளர் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் – சேலம்<br>1. பொ.த.அ / உதவி செயற்பொறியாளர் (மின்)<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0427 | 2418839 | மின் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் –சேலம். |
| | **கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மதுரை** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் மதுரை<br>1. பொ.த.அ / துணை கண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ ./ கண்காணிப்புப் பொறியாளர் | 0452 | 2530817 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் மதுரை |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மதுரை<br>1. பொ.த.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0452 | 2530718 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மதுரை |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், இராமநாதபுரம்<br>1.பொ.த.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர்<br>2.மே.மு.அ ./ செயற்பொறியாளர் | 04567 | 230728 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், இராமநாதபுரம் |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 4 | செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், திண்டுக்கல்<br>1. பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர் | 0451 | 2427432 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், திண்டுக்கல் |
| 5 | செயற்பொறியாளர் , பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், தேனி<br>1. பொ.த.அ / முதுநிலை வரைத்தொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர் | 04546 | 260429 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், தேனி |
| | **கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், மதுரை** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் , பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், மதுரை<br>1. பொ.த.அ / துணைகண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0452 | 2530057 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், மருத்துவப் பணிகள், மதுரை |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், மதுரை<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0452 | 2530520 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், மதுரை |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், சிவகங்கை<br>1. பொ.த.அ / தொழிற்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04575 | 240871 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், சிவகங்கை |
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருநெல்வேலி<br>1. பொ.த.அ / முதுநிலை வரைதொழில் அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0462 | 2581311 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மருத்துவப் பணிகள், திருநெல்வேலி–11 |
| | **கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருநெல்வேலி** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் , பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம் – திருநெல்வேலி<br>1.. பொ.த.அ / துணைகண்காணிப்புப் பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0462 | 2576711 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) வட்டம், திருநெல்வேலி–627 002 |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>தூத்துக்குடி<br>1 . பொ.த.அ / தொழில் நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0461 | 2325039 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், தூத்துக்குடி |
| 3 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>திருநெல்வேலி<br>1. பொ.த.அ / தொழில் நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0462 | 2585555 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், திருநெல்வேலி–627 002 |
| 4 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>விருதுநகர்<br>1. பொ.த.அ / தொழில் நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04562 | 244711 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், கோட்டம், விருதுநகர் |
| 5 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம்,<br>நாகர்கோவில்<br>1. பொ.த.அ . / தொழில் நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 04652 | 278330 | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) கோட்டம், மாவட்ட ஆட்சியரக வளாகம், நாகர்கோவில்–629 002 |
| | **திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை –5** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) வட்டம் – சென்னை –5<br>1. பொ.த.அ / உதவிசெயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 044 | 28410402<br>Extn. 277<br>Extn. 276 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, கட்டடங்கள் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) வட்டம் –சென்னை –5 |
| 2 | செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், தரமணி, சென்னை–113<br>1. பொ.த.அ . / உதவிசெயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | | | செயற்பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், தரமணி, சென்னை–113 |
| | **மின் வட்டம் , மதுரை** | | | |
| 1 | கண்காணிப்புபொறியாளர் பொதுப்பணித்துறை, மின் வட்டம், மதுரை<br>1. பொ.த.அ / தொழில்நுட்ப நேர்முக அலுவலர்<br>2. மே.மு.அ / கண்காணிப்புப் பொறியாளர் | 0452 | 2530757 | கண்காணிப்புபொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின்வட்டம், மதுரை |
| 2 | மின் பொறியாளர் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் –மதுரை<br>1. பொ.த.அ / உதவி செயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0452 | 2530757 | மின் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின் கோட்டம் –மதுரை |

| வ. எண் | அலுவலகத்தின் பெயர்/பதவி/அலுவலர் பதவி | எஸ்டிடி | தொலை பேசி | அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 3 | மின் பொறியாளர் பொதுப்பணித்துறை, மின் கோட்டம், மருத்துவப் பணிகள், மதுரை<br><br>1. பொ.த.அ / உதவி செயற்பொறியாளர்<br>2. மே.மு.அ / செயற்பொறியாளர் | 0452 | 2520757 | மின் பொறியாளர் அலுவலகம் பொதுப்பணித்துறை, மின் கோட்டம், மருத்துவப் பணிகள், மதுரை |

**சுருக்க விபரம் :**

பொ.த.அ –பொதுத் தகவல் அலுவலர்
மே.மு.அ – மேல்முறையீட்டு அலுவலர்
இ.த.பொ (க) – இணை தலைமைப் பொறியளர் (கட்டடம்)
து.த.பொ(க) – துணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்)
க.பொ – கண்காணிப்புப் பொறியாளர்
செ.பொ – செயற் பொறியாளர்
து.க.பொ – துணை கண்காணிப்புப் பொறியாளர்
தொ.நு.அ – தொழில்நுட்ப நேர்முக அலுவலர்

உ.செ.பொ – உதவி செயற்பொறியாளர்
உ.பொ – உதவி பொறியாளர்
இ.பொ – இளம் பொறியாளர்
த.வ.அ – தலைமை வரைதொழில் அலுவலர்
மு.தொ.அ – முதுநிலை வரைதொழில் அலுவலர்
வ.தொ.அ – வரைதொழில் அலுவலர்
கோ.க – கோட்ட கணக்கர்
க.கா – கண்காணிப்பாளர்